# சீதாவகபுர நகர சபை

# கொழும்பு மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 மார்ச் 25 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2010 மார்ச் 26 ஆந் திகதியும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளில் இருந்து தென்படுவதும் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட தகவல்கள் மற்றும் விளக்கங்கள் என்பவற்றிற்கமையவும் சீதாவகபுர நகர சபையின் 2010 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக முறையாக ஏடுகள் பேணப்பட்டுள்ளன எனவும் இவ் அறிக்கையில் 1.3 பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களில் இருந்து நிதிக் கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு சீதாவகபுர நகர சபையின் செயற்பாடுகள் பற்றிய நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த வருடத்திற்கான அதனது செயற்பாட்டு விடயங்களில் நிதிப் பெறுபேறுகள் உண்மையாகவும் நியாயமாகவும் காட்டக் கூடிய விதமாக பொதுவாக ஏற்றுக் கொள்ளக் கூடிய கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

கணக்குகளில் காணப்பட்ட கணக்கீட்டுக் குறைபாடுகள், செலவுகள் மற்றும் சொத்துக்கள் என்பவற்றின் சந்தர்ப்பங்கள் மற்றும் பெறுமதியின் கீழ் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

| காரணம் | கணக்குகளின் மீதான தாக்கம் | | | |
|---|---|---|---|---|
| | செலவுகள் | | சொத்துக்கள் | |
| | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி |
| | | ரூபா. '000 | | ரூபா. '000 |
| கணக்குகளில் விடுபாடுகள் | - | - | 01 | 74,747 |
| கணக்குகளில் குறைத்துக் காட்டுதல் | - | - | 01 | 11,150 |
| வகைப்படுத்தல் வழுக்கள் | 01 | 42,875 | - | - |
| | 01 | 42,875 | 02 | 85,897 |

**1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

02 விடயங்களுக்குரிய கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 22,603,247 ஆக இருந்ததுடன் பட்டோலைகளின் பிரகாரம் அக்கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 22,484,747 ஆக இருந்தது.

**1.3.3 இணக்கமின்மைகள்**

விநியோகிக்கப்பட்டிருந்தும் 06 மாதங்களை விஞ்சியிருந்த ரூபா 40,667 கூட்டுத் தொகையான 10 காசோலைகள் தொடர்பாக இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 396(ஈ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 02. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது வருமானத்தை விஞ்சிய மீண்டு வரும் செலவு ரூபா 16,428,291 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் போது வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவு ரூபா 20,999,168 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதீப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டிற்காக மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பான சமர்ப்பித்திருந்த மதீப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் பற்றி தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | வருமான விடயம் | 2010 மதிப்பீட்டு | 2010 உள்ள வாறான | 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திரண்ட நிலுவை | 2009 மதிப்பீட்டு | 2009 உள்ள வாறான | 2009 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா. '000 | ரூபா. '000 | ரூபா. '000 | ரூபா. '000 | ரூபா. '000 | ரூபா. '000 |
| (i) | வீத வரி மற்றும் வரி | 11,137 | 8,089 | 4,997 | 11,898 | 8,548 | 4,967 |
| (ii) | வாடகை | 12,221 | 10,897 | 1,774 | 12,570 | 11,355 | 1,574 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 182 | 160 | 76 | 261 | 262 | 53 |
| (iv) | ஏனைய வருமானங்கள் | 26,527 | 23,292 | 3,854 | 32,728 | 30,898 | 6,453 |

சமர்ப்பிக்கப்பட்டிருந்த விபரங்கள் கணக்குகளுடன் இணங்காமல் காணப்படுகின்றமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

### 2.2.2 விளம்பர அறிவித்தல் கட்டணம்

2009 ஒக்தோபர் 21 ஆந் திகதிய 8.4 ஆம் இலக்க பொதுச் சபைத் தீர்மானத்தின் பிரகாரம் அறிவித்தல் பலகைக் கட்டணம் அறவிடவேண்டிய போதிலும் 08 அறிவித்தல் பலகைகளுக்காக அறவிட வேண்டிய ரூபா 82,560 ஆன கட்டணம் அறவிடபப்படாதிருந்தமை 2010 நவம்பர் 11 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீகப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது.

### 2.2.3 கடை வாடகை

(i) சபையினால் வாடகையாளர்களுடன் உடன்பட்டிருந்த வாடகை ஒப்பந்தத்தின் 15 ஆம் இலக்க பிரிவின் பிரகாரம் கீழே காணப்படும் சந்தர்ப்பங்களில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| கடை சம்பந்தமான விபரம் | கடைகளின் எண்ணிக்கை | மூடப்பட்டிருந்த காலப்பகுதி | 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் நிலுவை கடை வாடகைப்பணம் |
|---|---|---|---|
| | | | ரூபா |
| சீதாவக பஸ்தரிப்பு நிலையம் | 08 | காலம் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | - |
| சந்திரா விளையாட்டரங்கு அருகில் | 07 | 3 மாதங்களுக்கு மேல் | 206,292 |

(ii) வாடகை ஒப்பந்தத்தின் இலக்கம் 24 இலுள்ள நிபந்தனையின் பிரகாரம் வாடகையாளரினால் உரிய சொத்து முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ வேறுநபர்களுக்கு விற்கவோ அல்லது உப வாடகைக்கு விடவோ முடியாதிருந்த போதிலும் 5 கடைகளின் வாடகையாளர்களினால் உயர் வாடகை அறவிடப்பட்டு வெளித்தரப்பினர்களுக்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தன.

### 2.2.4 அனுமதிப்பத்திரக் கட்டணம்

நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 164 மற்றும் 165 போன்ற பிரிவுகளின் பிரகாரம் 2010 மார்ச் 12 ஆந் திகதி வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருந்த உப விதிகளில் குறிப்பிடப்பட்ட வியாபாரங்களை செய்து கொண்டிருக்கும் 09 வியாபரிகளின் 2010 ஆம் ஆண்டிற்கு அனுமதிப்பத்திரக் கட்டணம் மற்றும் வியாபார வாடகைகள் செலுத்தியிருக்கவில்லை.

### 2.3 செலவினக் கட்டமைப்பு

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான சபையின் பாதீட்டு மற்றும் உள்ளவாறான செலவு உரிய முரண்களுடன் கீழே தரப்பட்டுள்ளன.

| | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|
| **செலவு விடயம்** | **பாதீட்டு** | **உள்ளவாறான** | **முரண்** | **பாதீட்டு** | **உள்ளவாறான** | **முரண்** |
| | **ரூபா. '000** | **ரூபா. '000** | **ரூபா. '000** | **ரூபா. '000** | **ரூபா. '000** | **ரூபா. '000** |
| **மீண்டுவரும் செலவுகள்** | | | | | | |
| ஆளுக்குரிய வேதனம் | 43,808 | 36,505 | 7,303 | 45,966 | 33,515 | 12,451 |
| ஏனையவை | 45,257 | 59,980 | (14,723) | 37,510 | 61,639 | (24,129) |
| உப கூட்டுத் தொகை | 89,065 | 96,485 | (7,420) | 83,476 | 95,154 | (11,678) |
| மூலதன செலவுகள் | 10,691 | 11,647 | (956) | 10,248 | 13,638 | (3,390) |
| மொத்தக் கூட்டுத் தொகை | 99,756 | 108,132 | (8,376) | 93,724 | 108,792 | (15,068) |

## 2.4 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீடு செய்யப்பட்ட வருமானம் / செலவு மற்றும் உள்ளவாறான வருமானம் செலவுகளிடையே கணிசமான அளவு முரண்கள் அவதானிக்கப்பட்டமையானது பாதீடு பயன்தரு வகையில் முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்காமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

## 2.5 மனித வள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணிகள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணிகள் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| பதவிகளின் தரம் | அங்கீகரிக்கப்பட்ட | உள்ளவாறான |
|---|---|---|
| நிறைவேற்றுனர் | 05 | 03 |
| இரண்டாம் தரத்தினர் | 43 | 33 |
| ஆரம்ப தரத்தினர் | 105 | 92 |
| | 153 | 128 |

## 2.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 2.6.1 கிடைக்க வேண்டிய கணக்குகள்

2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 33,648,328 ஆக இருந்ததுடன், 01 வருட காலத்தை விஞ்சிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 13,201,133 ஆகும். இதில் ரூபா 2,072,703 ஆன மீதி 06 வருடகாலத்தையும் விஞ்சிக் காணப்பட்டது.

### 2.6.2 அறவிடப்பட வேண்டிய பதவியணிக் கடன்

2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய பதவியணிக்கடன் முற்பண மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 4,827,991 ஆக இருந்ததுடன் 01 வருட காலத்தினை விஞ்சிய அறவீடுகள் நிலுவையாக இருந்த கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 154,034 ஆகும்.

### 2.6.3 கணிப்பீடு செய்யப்படாத சொத்துக்கள்

பௌதீக மெய்மையாய்வு / கணிப்பீட்டுச் சபை அறிக்கைகளின் மூலம் உறுதிப்படுத்தப்படாத 2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ஏட்டுப் பெறுமதியில் கணக்கிடப்பட்ட சொத்துக்களின் பெறுமதி ரூபா 26,884,565 ஆகும்.

### 2.7 அகக் கணக்காய்வு

நிறுவனத்தில் போதியளவு அகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிருவாகம்
(இ) இருப்புக் கட்டுப்பாடு